# வகுப்பு - 8
# தமிழ் முதல் தாள் (AT)

## மாதிரி வினாக்கள்

### வினா 1

**கற்றல் அடைவு** : இயற்கை வளங்களைப் பற்றி அறிந்து விளக்கம் எழுதுகிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் ( அலகு - 1)

**சிந்தனைத் திறன்கள்** : பொருள் கண்டறிதல், இலக்கணக்குறிப்பெழுதுதல், தொடர்பு படுத்தி விளக்கி எழுதி வெளியிடல்.

**Q** *மலை*

*பரந்த விரிந்து மலை நிமிர்ந்து* உயர்ந்த
வரையே, விண்ணோடு
பிறந்து தவழ்ந்து வளர்ந்த இருண்ட
முகிலின் அன்போடு

..............................................................

- இப்பாடலில் வரும் 'வரை' என்ற சொல்லின் பொருள் எழுதுங்கள் 1
- மலை என்ற இக்கவிதையின் ஆசிரியர் பெயர் எழுதுங்கள் 1
- 'விண்' என்ற சொல்லின் இருபொருள் எழுதுங்கள் 1
- பாடலின் வரிகள் குறிக்கும் மலையின் அழகை விளக்கி எழுதுங்கள் 2

### வினா 2

**கற்றல் அடைவு** : இயற்கை வளங்களைப் பற்றி அறிந்து விளக்கம் எழுதுகிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் ( அலகு - 1)

**சிந்தனைத் திறன்கள்** : பொருள் கண்டறிதல், இலக்கணக்குறிப்பெழுதுதல், தொடர்பு படுத்தி விளக்கி எழுதி வெளியிடல்.

**Q** **கோடிட்ட இடம் நிரப்புக**

குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் ............................... எனப்படும்.

## வினா 3

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | கதைப்பகுதியிலிருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்களை விமர்சனம் செய்து எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு -1) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | ஒப்பீடு செய்தல், விவரித்தல், விமர்சித்தல், காரண காரியங்களைக் கண்டறிதல், அறிவிப்பூர்வமாக நிரூபித்தல். |

**Q** 'ஆசிரியர் ஜெபமணியின் 'அப்பச்சி மலை' என்ற கதையில் அப்பச்சி, ஜெறி, ஜெறியின் அப்பா, அம்மா போன்ற கதாபாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

- இக்கதாபாத்திரங்களில் உங்கள் மனதைக் கவர்ந்த கதாபாத்திரம் எது? 1
- அக்கதாபாத்திரத்தின் சிறப்புத் தன்மைகள் எவை? 2
- கதையில் அக்கதாபாத்திரத்தின் இடம், உரையாடல், மற்றவர்களுடனான தொடர்பு எவ்வாறு அமைந்திருந்தது. இதனடிப்படையில் கதாபாத்திர விமர்சனம் தயார் செய்யுங்கள். 2

## வினா 4

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | விழாக்களை வருணனை செய்து கட்டுரை எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு - 2) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | விழாக்களின் முக்கியத்துவம் அறிதல், பொன்மொழிகளைப் பயன்படுத்துதல், கற்பனை நயத்துடன் எழுதுதல், செய்திகளைச் சிறப்பித்துக் கூறுதல். |

**Q** பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவதற்காக **'ஓணத்திருவிழா'** என்ற தலைப்பில் சிறு கட்டுரை தயார் செய்க. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தவும்.

குறிப்புகள்
- அத்தப்பூக்களம்
- புலிக்களி
- வள்ளங்களி
- ஓண விருந்து
- ஊஞ்சல் விளையாட்டு

4

**வினா 5**

**கற்றல் அடைவு** :விழாக்களை வருணனை செய்து கட்டுரை எழுதுகிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் (அலகு - 2)

**சிந்தனைத் திறன்கள்** : விழாக்களின் முக்கியத்துவம் அறிதல், பொன்மொழிகளைப் பயன்படுத்துதல், கற்பனை நயத்துடன் எழுதுதல், செய்திகளைச் சிறப்பித்துக் கூறுதல்.

**Q** **கோடிட்ட இடம் நிரப்புக**

பூரம் திருவிழா .......................................... ஊரில் கொண்டாடப்படுகிறது.

**வினா 6**

**கற்றல் அடைவு** : நாட்டுப்புற மருத்துவத்தின் மேன்மைகளை அறிந்து வினாநிரல் எழுதுகிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் (அலகு 3)

**சிந்தனைத் திறன்கள்** : பிற மருத்துவ முறைகளுடன் ஒப்பீடு செய்தல். நாட்டுப்புற மருத்துவத்தின் நன்மையறிதல், வினாக்களை உருவாக்க அறிதல்.

**Q** "நாட்டுப்புற மருத்துவத்தின் மேன்மைகள் குறித்து உரையாற்றுவதற்குத் தேவையான தகவல்கள் கிடைக்கும் பொருட்டு சிறந்த நாட்டுப்புற மருத்துவரிடம் பேட்டி காண்பதற்கான எட்டு வினாக்கள் தயார் செய்க. 4

**வினா 7**

**கற்றல் அடைவு** : வட்டார வழக்கு அல்லது பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ் சொற்களை எழுதுகிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் (அலகு 5)

**சிந்தனைத் திறன்கள்** : வட்டார வழக்குச் சொற்களை அறிதல், அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களைக் குறிப்பிடுதல்.

**Q** பின்வரும் பகுதியைத் தூய தமிழ் நடையில் எழுதுக.

"டே... ஏர்றா... எந்தெந்தப் பசங்களையெல்லாம் நா ஏத்திக்கினு போறேன். ஒன்னெ ஏத்திக்கினா என்னடா? உம்... சும்மா ஏறி உக்காரு. 3

**வினா 8**

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | கவிதையை வாசித்துக் கருத்துகளை உணர்ந்து விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு 5) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | கவிதையின் பொருளறிதல், சமகாலப் பிரச்சினைகளைப் புரிதல், தன்னுடைய பார்வையில் விமர்சனம் செய்தல். |

**Q** "சத்தியம் எங்கள் வேதம்
சமத்துவம் எங்கள் கீதம்
வருவதைப் பகிர்ந்து உண்போம்
வந்தே மாதரம் என்போம்
வந்தே மாதரம்! வந்தே மாதரம்! வந்தே மாதரம்".

கண்ணதாசனின் "என் வீடு" என்ற இக்கவிதை வரிகளை வாசித்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள். 5

**குறிப்புகள்**

கவிதையின் மையக் கருத்தை உணர்ந்து சமகாலப் பிரச்சினைகளுடன் ஒப்பீடு செய்து தனது கருத்தை முன்வைத்தல். 5

**வினா 9**

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | மனித நேயமுடையவர்களை அறிந்து எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு 5) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | அடையாளம் கண்டு குறிப்பிடுதல். |

**Q உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:**

அன்னை தெரசாவின் இயர்பெயர்

அ. ஆலீஸ் ஆ. ஆக்னஸ் இ. செரசா 1

**வினா 10**

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | பிழை நீக்கி எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு 6) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | கருத்தை புரிதல், வாக்கிய அமைப்பு அறிதல், ஒற்றுப் பிழையின்றி எழுதுதல். |

**பிழை நீக்கி எழுதுக.**

1. ஆண்களைப்போலவே பெண்களுக்கும் அரசு பணி அனைத்து துறைகளிலும் கொடுக்க வேண்டும்.
2. கல்விநலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.
3. பெண்கள் பெறவேண்டியது பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

**வினா 11**

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | சுயமாக வாசித்துக் கருத்துகளைப் புரிந்து கொண்டு, பல்வேறு வடிவங்களில் வெளியிடுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு 6) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | கொடுக்கப்பட்ட பகுதியைப் புரிதல், சரியாக வினாக்கள் எழுதுதல். |

**கொடுக்கப்பட்ட பகுதியைப் படித்து இரண்டு வினாக்கள் எழுதுங்கள்.**

"பாரதியார், கங்கை நதிப்புறத்துக் கோதுமையைக் காவிரி வெற்றிலைக்கு மாறாகக் கொள்வோம் என்றும், மராட்டியர் கவிதை கொண்டு சேரத்தின் தந்தங்களைப் பரிசாகத் தருவோம் என்று குறிப்பிடுகிறார்". 2

**வினா 12**

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | பாடலின் பொருளறிந்து விளக்கக் குறிப்பு எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | கேரளப் பாடநூல் (அலகு 3) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | பாடல்களின் தன்மையறிதல், பொருளை உணர்தல், நயம் உணர்தல். |

**Q**

"ஒளிபடைத் தவிழியு டையார்! நெஞ்சில்
உறுதி கொண்ட துணிவுடையார்
களிமிருந்தஇன் சொல்லுடையார்! உடல்
கட்டுடையார்! சாந்துப் பொட்டுடையார்!".

இப்பாடலுக்கான விளக்கக் குறிப்பு தயார் செய்யுங்கள். குறிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**குறிப்புகள்**
- மையக்கருத்து
- சொல் நயம்
- பொருள் நயம்
- பிடித்த வரிகள், காரணம்
- உவமை நயம்

4

## வினா 13

**கற்றல் அடைவு** : பாடலை நயம் பாராட்டி, மையக்கருத்து, பொருள் போன்றவற்றை அறிந்து கொள்கிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் ( அலகு - 3)

**சிந்தனைத் திறன்கள்** : எதுகை, பண்புத்தொகை போன்றவற்றை அறிதல், பாடலின் மையக் கருத்து அறிந்து பொருளெழுதுதல்.

**Q** "வான்கலந்த மாணிக்க வாசகரின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கரும்புச் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து என்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

- இப்பாடலில் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுங்கள் 1
- 'பாடுங்கால்' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு எழுதி விளக்கம் எழுதுங்கள் 1
- பாடலின் மையக் கருத்தைச் சுட்டி பொருள் எழுதுங்கள் 2

## வினா 14

**கற்றல் அடைவு** : நூலையும் நூலாசிரியரையும் அறிந்து பொருத்துகிறார்கள்.

**அலகு** : கேரளப் பாடநூல் ( அலகு - 1)

**சிந்தனைத் திறன்கள்** : சரியான விடையைக் கண்டு பொருத்துகிறார்கள்.

**Q** **பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| சிலப்பதிகாரம் | - | திருத்தக்கத் தேவர் | |
| திருக்குறள் | - | கம்பர் | |
| சீவகசிந்தாமணி | - | திருவள்ளுவர் | |
| கம்பராமாயணம் | - | இளங்கோவடிகள் | 2 |